## வகுப்பு - 8 - வரலாறு, 4. மக்களின் புரட்சி

141. 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்தது எது?

(1) என்பீல்டுரகத் துப்பாக்கி (2) புதிய வகை தலைப்பாகை

(3) கொழுப்புத் தடவப்பட்ட தோட்டாக்கள் (4) பொருளாதாரச் சுரண்டல்

142. இந்துக்கள் புனிதமாகக் கருதும் விலங்கு

(1) பசு (2) பன்றி (3) பாம்பு (4) ஆடு

143. இஸ்லாமியர்கள் வெறுக்கும் விலங்கு

(1) பசு (2) பன்றி (3) பாம்பு (4) ஆடு

144. என்பீல்டுரகத் துப்பாக்கியைப் பயன்படுத்த மறுத்துத் தனது உயரதிகாரியைச் சுட்டுக் கொன்றவர்

(1) தாந்தியா தோபே (2) நானா சாகிப்

(3) மங்கள் பாண்டே (4) கன்வர் சிங்

145. மங்கள் பாண்டே எந்தப் படைப்பிரிவைச் சார்ந்தவர்?

(1) குவாலியர் (2) மீரட் (3) டெல்லி (4) பராக்பூர்

146. வெளிப்படையாகப் பெரும் புரட்சி தோன்றிய இடம்

(1) குவாலியர் (2) மீரட் (3) டெல்லி (4) பராக்பூர்

147. பொருத்துக.

(அ) பகதூர்ஷா பேரரசராக அறிவிக்கப்படுதல் - (i) 29.03.1857

(ஆ) மீரட் புரட்சி - (ii) 10.05.1857

(இ) மங்கள் பாண்டே எதிர்ப்பு - (iii) 11.05.1857

(ஈ) டெல்லி ஆங்கிலேயர்களால் கைப்பற்றப் படுதல் - (iv) 20.09.1857

(1) அ - iii, ஆ - ii, இ - I, ஈ - iv (2) அ - ii, ஆ - iii, இ - I, ஈ - iv

LIVEWORKSHEETS

(3) அ - iii, ஆ - I, இ - ii, ஈ - iv (4) அ - iii, ஆ - ii, இ - iv, ஈ - i

148. 1857 ஆம் ஆண்டு, புரட்சியாளர்கள் யாரைப் பேரரசராக அறிவித்தனர்?

(1) பகதூர்ஷா-I (2) பகதூர்ஷா-II

(3) 3 ஆம் பகதூர்ஷா (4) பதே ஹைதர்

149. ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள் கூற்றுப்படி, மாபெரும் புரட்சியில் கலந்து கொண்டவர்களில் மிகவும் துணிச்சலானவர் யார்?

(1) மங்கள் பாண்டே (2) நானா சாகிப்

(3) தாந்தியா தோப் (4) லட்சுமிபாய்

150. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானது எது?

(1) புரட்சியாளர்களில் பலர், நிலக்கிழார்களிடம் தாங்கள் கொடுத்த பத்திரங்களை எரிக்க புரட்சியைப் பயன்படுத்திக் கொண்டனர்.

(2) இந்தியர்களில் சிலர் ஆங்கிலக் கல்வி மட்டுமே இந்தியாவை நவீனப் படுத்த முடியும் என நம்பினர்.

(3) புரட்சியாளர்களில் பலர், தங்கள் ஓய்வூதியம், பட்டங்களை நீக்கியதால் பழிவாங்குவதற்காகப் புரட்சியில் கலந்து கொண்டனர்.

(4) ராஜாராம் மோகன்ராய் புரட்சியை எதிர்த்தார்.

151. மாபெரும் புரட்சி நடைபெற்ற போது கவர்னர் ஜெனரலாக இருந்தவர் யார்?

(1) டல்ஹௌசி (2) கானிங்

(3) வெல்லெஸ்லி (4) வில்லியம் பெண்டிங்

152. கீழ்க்கண்ட எந்தெந்தப் பிரதேசங்களில் இருந்து கானிங் பிரபு படைகளை வரவழைத்தார்?

(அ) சென்னை (ஆ) மும்பை (இ) தென் ஆப்ரிக்கா

(ஈ) சீனா (உ) ஸ்ரீலங்கா (ஊ) வங்காளம்

(1) இ, ஈ தவிர மற்றவை (2) ஆ, ஊ தவிர மற்றவை

(3) இ, ஊ தவிர மற்றவை (4) அ, உ தவிர மற்றவை

LIVEWORKSHEETS

153. சர் காலின் கேம்பெல் என்பவர் கீழ்க்கண்ட யாரைத் தோற்கடித்தார்?

(அ) நானாசாகிப் (ஆ) ஹஸ்ரத் மகால்

(இ) கான் பகதூர் கான் (ஈ) கன்வர்சிங்

(1) அ, இ (2) ஆ, இ (3) ஆ, ஈ (4) ஈ, அ

154. பொருத்துக.

(அ) பகதூர்ஷா - (i) நேபாளத்திற்குத் தப்பிச் சென்றார்.

(ஆ) கன்வர் சிங் - (ii) போர்க்களத்தில் கொல்லப்பட்டார்.

(இ) நானாசாகிப் - (iii) கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்.

(ஈ) தாந்தியா தோபே - (iv) நாடு கடத்தப்பட்டார்.

(1) அ - iii, ஆ - ii, இ - I, ஈ - iv (2) அ - iv, ஆ - ii, இ - I, ஈ - iii

(3) அ - iii, ஆ - I, இ - ii, ஈ - iv (4) அ - iv, ஆ - I, இ - ii, ஈ - iii

155. நேபாளத்திற்குத் தப்பிச் சென்று மறைந்து வாழ்ந்த புரட்சியாளர்கள் இவர்களில் யார்?

(அ) நானாசாகிப் (ஆ) ஹஸ்ரத் மகால்

(இ) கான் பகதூர் கான் (ஈ) கன்வர்சிங்

(1) அ, இ (2) ஆ, இ (3) ஆ, அ (4) ஈ, அ

156. போரின் போது இறந்த புரட்சியாளர்கள் இவர்களில் யார்?

(அ) லட்சுமிபாய் (ஆ) ஹஸ்ரத் மகால்

(இ) கான் பகதூர் கான் (ஈ) கன்வர்சிங்

(1) அ, இ (2) ஆ, இ, ஈ (3) ஆ, அ (4) ஈ, அ, இ

157. பெரும் புரட்சி நடந்த இடங்களையும், அதை அடக்கிய தளபதிகளையும் பொருத்துக.

(அ) லக்னோ - (i) சர் காலின் கேம்பெல்

(ஆ) பீகார் - (ii) ஜெனரல் ஹக்ரோஸ்

LIVEWORKSHEETS

(இ) ஜான்சி -

(ஈ) பரெய்லி -

(iii) ஹென்றி லாரன்ஸ்

(iv) வில்லியம் டைலர்

(1) அ - iii, ஆ - iv, இ - I, ஈ - ii

(2) அ - iii, ஆ - iv, இ - ii, ஈ - i

(3) அ - iii, ஆ - I, இ - ii, ஈ - iv

(4) அ - iv, ஆ - I, இ - ii, ஈ - iii

158. அயோத்தியின் ஆட்சியாளராக இருந்தவர் யார்?

(1) லட்சுமிபாய்

(2) வேலுநாச்சியார்

(3) பேகம் ஹஸ்ரத் மகால்

(4) கன்வர்சிங்

159. கீழ்க்காண்பவர்களில் யார் பெரும் புரட்சியின் போது ஆங்கிலேயருக்கு உதவவில்லை?

(1) ஆப்கானியர்கள்

(2) சீக்கியர்கள்

(3) கூர்க்கர்கள்

(4) முகலாயர்கள்

160. பெரும் கலகம் தோல்வியடைந்ததற்கான காரணங்களை ஆராய்க.

(அ) புரட்சிப் படைகளிடையே சரியான ஒருங்கிணைப்பு இல்லை.

(ஆ) ராணி லட்சுமிபாய், தாந்தியா தோப் போன்றோர் சிறந்த தளபதிகளாக இல்லை.

(இ) கிழக்கிந்தியக் கம்பெனியிடம் மையப்படுத்தப்பட்ட தலைமை, நவீன ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் இருந்தன.

(ஈ) வங்காளம், பரெய்லி, ராஜபுதனம் போன்ற பகுதிகள் புரட்சியில் கலந்து கொள்ளவில்லை.

(1) அ, ஆ, இ சரி

(2) ஆ, இ, ஈ சரி

(3) அ, ஆ, ஈ சரி

(4) அனைத்தும் சரி

LIVEWORKSHEETS